சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

பு.சா.1 கருணாநதி த/பெ.தசரதன் வயது.40 என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

05.11.2020 முன்னர் நான் எதிரிக்கு பணம் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 05.11.2020க்கு முன் எதிரி எனக்கு பணம் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 09.09.2020 அன்று எதிரிக்கு நான் ரூ.16,500/- கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்தேன். 06.01.2020 அன்று ரூ.6250/- எதிரி எனக்கு கொடுத்துள்ளார் என்றால் இல்லை. ரூ.3,50,000/- நான் எதிரிக்கு கொடுத்தற்கு காசோலை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ரூ.3,50,000/- கொடுத்தேன் என்றால் அவர் எனக்கு நெருங்கிய நண்பர் இல்லை. அவர் என்னிடம் அவ்வப்போது ரூபாய் 5000, 10000 வாங்குவார் அதனை திருப்பி கொடுத்துவிடுவார் அவருடைய பிள்ளைகளின் படிப்பு மற்றும் திருமண செலவிற்கு பணம் கேட்டால் கொடுத்தேன். 2020 ம் வருடம் நான் என்ன வேலை செய்துக்கொண்டிருந்தேன் என்றால் ஜோலார்பேட்டை இரயில் நிலையத்தில் ஸ்டால் வைத்து டீ மாஸ்டராக இருந்தேன். அதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஐடி கார்டு உள்ளது. 2020ல்நான் வருமான வரி தாக்கல் செலுத்தியத்திற்கு ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இரயில்வேயில் வரி பிடித்துதான் எனக்கு சம்பளம் போடுவார்கள். இதே நீதிமன்றத்தில் வேறு 2 வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் அது என்ன வழக்கு என்றாலும் சரிதான் ஒரு கசோலை வழக்கு மற்றும் ஒரு சிவில் வழக்கு உள்ளது. நான் வட்டிக்கு கொடுக்கல் வாங்கள் தொழில் செய்கிறேன் என்றாலும் அதனை நான் அனுமதியில்லாமல் செய்கிறேன் என்றாலும் எனக்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை. எனக்கு இரயில்வேயியல் செட்டில்மென்டாக ரூ.17 லட்சம் வந்தது அதிலிருந்துதான் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். 17 லட்சம் வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கையில் உள்ளது. எந்த வருடம் எனக்கு ரூ.17 லட்சம் வந்தது என்றால் 2017ல் வந்தது. எப்படி வந்தது என்றால் இரயில்வேயில் வேலை

செய்தபோது IRCTC லாஸ் ஆனாது என்ற கம்பெனியை மூடிவிட்டார்கள் அதற்காக கொடுத்தார்கள் அனைவருக்கும் கொடுத்தார்கள். மேற்படி 17 லட்சம் வந்ததை எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவிக்கவில்லை என்றால் என்னுடைய வழக்கறிஞரைதான் கேட்கவேண்டும்.

Signature of witness.